1983 பிப்ரவரி 8

அதிக மகசூல் தரும் வாழை இரகம்

வினா எண் 177— திரு. இரா. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக மகசூல் வாழை எந்தெந்த மாவட்டங்களில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது?

(ஆ) ரொபஸ்டா என்ற வகைக்கு பின்னர் கண்ட அதிக மகசூல் வாழை எது?

(இ) ஏற்றுமதி மூலம் அரசிற்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) குள்ள வாழை என்ற இரகம் அதிக மகசூல் கண்ட வாழையாகும்.

(இ) தமிழகம் பழங்கள் உற்பத்தியில் தன்னிறைவு பெறவில்லை. எனவே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுவதில்லை.

திரு. இல. பலராமன் : இந்த 'ரொபஸ்டாஸ்' என்ற வகை வாழையை அதிகமாக நோய் தாக்குகிறது. பாஸ்டர் நோய், அழுகல் நோய் அதிகமாகத் தாக்கப்படுவதால் இதை அதிகமாக பயிரிடமுடியாத ஒருசூழ்நிலை விவசாயிகள் மத்தியில் ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதைத் தடுப்பதற்கு இதுவரையில் எந்த நடவடிக்கையும் இல்லை என்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அது பற்றி எந்த புகாரும் வரவில்லை. நோய் தாக்குதலிருந்து பாதுகாக்க நிச்சயமாக துறை நடவடிக்கைகள் எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: அமைச்சர் அவர்கள் தஞ்சை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் அதிக மகசூல் தரும் வாழையை அறிமுகப் படுத்தி உள்ளதாகக் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் அவ்வாறு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வாழைக்காக எவ்வளவு பணம் இந்த ஆண்டு நம் அரசு செலவழித்திருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

(முற்பகல் 9.30)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 350 (ஹெக்டேரில் ரொபஸ்டா வாழை பயிரிடப்படுவதாகத் தகவல் இருக்கிறது. பணத்தைப் பற்றிய தகவல் இல்லை.

திரு இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக மத்திய அரசாங்கம் அதிகமான பணத்தை ஒதுக்கீடு செய்கிறது. அது எந்த வகையில் பயன்படுத்தப்படுகிறது? வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள

1983 பிப்ரவரி 8]

மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம், மாநில அரசாங்கத்திற்கு எந்த அளவுக்கு உதவிகரமாக இருக்கிறது இதிலே மாநில அரசாங்கத்தின் பங்கென்ன என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கான விடையிலேயே இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். வாழை உற்பத்தி தமிழகத்தைப் பொறுத்த வரை தன்னிறைவு பெறவில்லை. நாம் உற்பத்தி செய்வதில் கொஞ்சம் பக்கத்து மாநிலங்களுக்கு அனுப்புகிறோம்; அதே போல் அங்கிருந்தும் அதே அளவுக்கு நமக்கு இங்கே வருகின்றன. ஆகவே, ஏற்றுமதி செய்யக்கூடிய பிரச்னைக்கு இடமில்லை. ஆராய்ச்சி நிலையங்களைப் பொறுத்த அளவில், மத்திய ஆராய்ச்சி நிலையத்தோடு, மாநில வேளாண்மைப் பல்கலைக் கழகமும் இணைந்து செயல்படுகின்றது.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம் வேளாண்மை துறையில் சிறந்த மாவட்டங்களாக இருக்கின்றன. ஆகவே, அதிகமான மகசூலைக் கொடுக்கக்கூடிய வாழையை அறிமுகப்படுத்துவதற்கு அரசு முன்வருமா? நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே(முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதிய ரகங்களைக் கண்டுபிடித்து, நம்முடைய தேவையை ஈடுகட்ட முயற்சி செய்கின்ற இந்த நெருக்கடி நேரத்தில். மதுரை மாவட்டம், திண்டுக்கல் பகுதியில் இருக்கக் கூடிய பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களில் சிறுமலை என்று சொல்லக்கூடிய, அதிக ருசியான வாழை, முடிக்கொத்து நோயால் கடந்த 4, 5 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டு, முழுவதும் அழிந்து விட்டதாகச் சொல்லுகிறார்களே, அதை மீண்டும் அபிவிருத்தி செய்து கொண்டு வருவதற்கு நமது அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, முடிக்கொத்து நோயினால் பாதிக்கப்பட்ட வாழையைப் பாது காக்க நாம் மாற்று மருந்து இன்னும் கண்டுபிடிக்கவில்லை. ஆகவே, அதை ஒட்டு மொத்தமாக அழிப்பதைத் தவிர, வேறு வழியில்லை. வேறுவகையான நோயால் பாதிக்கப்பட்டால், அதற்கு பாதுகாப்பு அளிக்கப்படும். முடிகொத்து நோய்க்கு தக்க மாற்று மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆராய்ச்சிக் கழகங்கள் ஈடுபட்டிருக்கின்றன.

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 1980, 1981 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட சாலைகள்.

*வினா எண். 178—திரு எம். சின்னசாமி; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்புசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் Roads formed from Sugarcane Cess Fund) 1980, 1981 ஆம் ஆண்டில் எத்தனை சாலைகள் அமைக்கப்பட்டன?

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்